**வெளிவிவகார அமைச்சர் கௌரவ மங்கள சமரவீர அவர்களுடனான சந்திப்பின் பின்னர் உதவிச்செயலாளர் நிஷா பிஷ்வால் மற்றும் உதவிச் செயலாளர் டொம் மலிநோவிஷ்கி ஆகியோர் பத்திரிகைகளுக்கு வழங்கிய செய்திகளின் முக்கிய குறிப்புக்கள்.**

ஜுலை 12, 2016

உதவிச்செயலாளர் நிஷா பிஷ்வால்

கௌரவ அமைச்சர் அவர்களே உங்களது உற்சாகமான, அன்பான வரவேற்பிற்க்கும் அத்துடன் நமது ஆக்கபூர்வமான சந்திப்பிற்கும் நன்றி. இந்த பயணமும் சந்திப்பும் எமது இரண்டு நாடுகளுக்குமிடையிலான உறவில் மாபெரும் சக்தியை அளிக்கின்றது, அத்துடன் எமது உறவின் முக்கிய விடயங்களையும் , கடந்த பெப்ரவரி மாதம் நாம் ஆரம்பித்த பங்காளித்துவ கலந்துரையாடல் , கடந்த வருடம் செயளாலர் கெரி அவர்கள் மேற்கொண்ட பயணம் , அடங்களாக பல முக்கிய விடயங்களை விவரிக்கின்றது.

இலங்கைக்கு சவாலாக இருந்த உள்நாட்டு பிரச்சணையை தீர்ப்பதில் மட்டுமன்றி பரந்த அளவில் சர்வதேச சமூகத்துடன் உறவை வளர்பதற்கான கலந்துரையாடல்களிலும் இலங்கையும் குறிப்பிடத்தக்க சக்தியைக் கொண்டுள்ளது. எமது இரு நாடுகளுக்குமிடையிலான உறவு மேலும் வலுப்பெருவதை ஐக்கிய அமெரிக்கா வரவேற்கின்றது. குடியரசை ஆதரிக்கின்ற நாடுகள் என்றவகையில் இலங்கையும் ஐக்கிய அமெரிக்காவும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரம் என்னும் இரண்டையும் பாதுகாப்பதற்காகவும் , அபிவிருத்தி செய்வதற்காகவும் செயல்படுவதற்குமான பொது இலக்குகளைப் பகிர்ந்து கொள்கின்றன. நாம் பங்காளர்கள் , இன்று எமது உறவு எப்போதும் உயர்ந்த நிலையில் உள்ளது.

கடந்த 60 ஆண்டுகளாக இலங்கையுடன் பங்காளர்களாக இருப்பதில் நாம் பெருமையடைகின்றோம் இக்காலகட்டத்தில் நாடு முழுவதும் அப்விருத்தி மற்றும் மனிதாபிமான உதவிகள் மூலம் வாழ்வாதாரம் , மற்றும் வாழ்க்கைதரம் என்பவற்றில் எண்ணிலடங்காத உயிர்களை அபிவிருத்தியடையச் செய்துள்ளது. நாம் விவசாயம் , கைத்தொழில்அபிவிருத்தி, கல்வி, சுகாதார பராமரிப்பு, வலுசக்தி மற்றும் இயற்கை வளங்கள் மற்றும் மனிதாபிமான செயற்பாடுகள் என்னும் பல தரப்பட்ட துரைகளில் தொடர்ந்தும் ஊக்கமளிக்கும் முதலீடுகளை தொடர்ந்தும் மேட்கொள்வோம். இலங்கை அரசாங்கம் என்றவகையில் நீதிக்கும் சமாதானத்துக்குமான அதன் அரசியல்சீர்திருத்த மறுசீரமைப்பு திட்டங்களை முன்னெடுத்து செல்லும் , ஐக்கிய அமெரிக்கா பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தவும் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் , சகல இலங்கையர்களுக்கும் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுப்பதற்கும் இலங்கை அரசாங்கத்துடன் பங்காளியாக தொடர்ந்தும் செயல்படும்.

இலங்கை அரசு நீதி மற்றும் பொருப்புக்கூறும்தன்மை, சமாதானம் , மனித உரிமைகளை மதித்தல் , குடியரசு போன்று விடயங்களில் அதன் பிரஜைகளின் அக்கறையை நிவர்த்தி செய்யும் வகையில் அர்த்தமுள்ள, உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் அதற்கான உதவிகளை நாம் தொடர்ந்தும் மேற்கொள்வோம். இந்து சமுத்திர பிராந்தியத்தில் இலங்கை ஒரு முக்கிய பங்காளியாக கருதப்படுவதனால் எமது இரு நாடுகளுக்கும் , இப்பிராந்தியத்தில் பாதுகாப்பும் , சாந்தியும் சமாதானமும் , உருவாகக்கூடிய ஒரு எதிர்காலத்தை காணக்கூடியதாக இருக்கும். தெற்கு மற்றும் தெற்காசிய சமூகத்தை இணைப்பதற்கான முக்கிய பிராந்தியமாகவும் நுலைவாயிலாகவும் விளங்குவதில் இலங்கையின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது.

இன்னும் அதிகமான வேலைகள் உள்ளன, ஆனால் சவால்களுக்கு முகங்கொடுத்து

தீர்த்துவைக்கவும் , இந்நாட்டு மக்கள் அவர்களது உண்மையான முக்கியத்துவத்தை உர்ந்துகொள்ளவும் , இந்நாட்டு மக்களுடனும் அரசாங்கத்துடனும் பங்காளியாக செயல்பட ஐக்கிய அமெரிக்கா கடமைப்பட்டுள்ளது.

உதவிச் செயளாலர் டொம் மலிநோவிஷ்கி

அமைச்சர் சமரவீர அவர்களே எமது உறவுக்காக நீங்கள் செய்துள்ள எல்லா செயற்பாடுகளுக்காகவும் உங்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். அது முன்னர் எப்போதும் இருந்ததைவிட சிறப்பாக உள்ளது. இலங்கையின் சர்வதேச நிலையை உயர்த்துவதற்கும் , மீளமைப்பதற்கும் நீங்கள் மேற்கொண்ட செயற்பாடுகலுக்கு எந்த அளவு நாங்கள் மதிப்பளிக்கின்றோம் என்பதைக் கூற வேண்டும்.

கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் உங்களது ஈடுபாட்டினாலும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் உங்களுக்குள்ள மதிப்பினாலும் இலங்கையின் வெளியுறவு வளர்ச்சி குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றமடைந்துள்ளது. அது, இந்த நாடு காணக்கூடிய பயனாகும்.

கானாமல் போனோருக்கான காரியாலயம் அமைப்பதற்கான சட்டம் , காணாமல் போனோர் தொடரபான சமவாய சீர்திருத்தம் , பாதுகாப்புப் படையினரால் மேலதிக காணிகளை விடுவித்தல் , பயங்கரவாத தடைசட்டத்தின்கீழ் கைதுசெய்தல் தொடர்பாக ஜனாதிபதியின் முக்கிய அறிவுறுத்தல் , அரசியலமைப்பு தொடர்பான செயற்பாடுகளில் அபிவிருத்தி கடந்த சில மாதங்கள் , குறிப்பாக கடந்த சில வாரங்கள் இலங்கை அதன் குடியாட்சிமயப்படுத்துதல், சமாதானம் , மறுசீரமைப்பு என்பவற்றின் நிகழ்ச்சி நிரலிள் மிகவும் உறுதியான முன்னெபுப்புக்களை மேற்கொள்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இவற்றில் அநேகமான வேலைகள் கடந்த வருட மனித உரிமைகள் கமிஷன் தீர்மானத்தில் முன்மொழியப் பட்டிருந்தன. இலங்கை மக்கள் அவர்களது நாட்டின் சட்டமும் பொறுப்புக்கூருந்தன்மையும் மீளமைக்கப்பட வேண்டும் என்பதற்காக அவர்களது தேசிய அக்கறையில் மேற்கொள்ளப்பட்டது என இத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்கா இந்த தீரமானத்தின் ஒரு உதவி அனுசரணையாளராக உள்ளது. எனவே அதனால் இந்த செயற்பாடுகள் நடைமுறைகள் செயற்படுத்தப்படுவதில் ஒரு பங்கு உள்ளதாக நாம் உணர்கின்றோம். ஆகையால் , மிகுதியாக உள்ள நிறுவனங்களை அமைத்து தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு உதவுவதற்கு காத்திருக்கின்றோம். செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக ஆணையாளர் சையிட் அவர்களுடனும் , ஐக்கிய அமெரிக்காவுடனும் நெருக்கமாக இணைந்து செயறப்படுவதை வரவேற்கின்றோம்.

சமாதானத்தின் இலாபமாக இலங்கை மக்களுக்கு கிடைக்கவேண்டிய பொருளளாதார அபிவிருத்தி, சந்தர்ப்பம் , பொறுப்பு என்பவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான எமது பொறுப்பு இலங்கையின் பங்காளி என்ற வகையில் இலங்கை மக்களுக்கு உதவ வேண்டுமென உதவிச் செயளாலர் பிஷ்வால் அவர்கள் கூறியதை நானும் உறுதிசெய்கின்றேன்.

எனது அபிப்பிராயப்படி பொருளாதார அபிவிருத்தியும் சமாதானமும் ஒன்றோடு ஒன்று இணைந்து கை கோர்த்து செள்ள வேண்டும். சமாதானத்தின் பயன் இல்லாமல் சகவாழ்வை மேற்கொள்வது

கடினமானதாகும். ஆனால் சகவாழ்வும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. உலகில் பல நாடுகளில் நாம் கண்டுள்ளபடி மக்கள் பிரிந்து வாழ்வதைவிட மக்கள் ஒன்றுகூடி வாழ முடியும். இலங்கையில் இடம்பெருபவை உலகில் பரந்த அளவில் வாழ்கின்ற மக்களுக்கு முக்கியமானவை என்பதை எமக்கு நினைவூட்டுகின்றது. ஏனென்றால் இன்று உலகில் என்ன நடக்கின்றது என்பகை அவதானிப்போமானால் அநேகமாக நல்ல செய்திகள் கிடைப்பது மிக அரிது.. நாம் இன்று காணுகின்ற அநேகமான பிரச்சணைகள் இலங்கையில் வேரூன்றி இருந்தவை என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். இந்த போட்டி பிரிவிணைவாத அரசியலுக்கும் பொது அரசியலுக்குமிடையிலான போட்டியாகும். ஆட்சி தொடர்பான கடின உழைப்பைவிட துரதிஷ்டவசமாக உலகின் பல இடங்களில் இன ரீதியாகவும் , சமய ரீதியாகவோ அல்லது தேசிய ரீதியாகவோ தோன்றுவதன்வாயிலாக அரசியலில் வெற்றிகாண்பது இலகுவாக உள்ளது.

எமது பிரச்சணைகளுக்கான பொறுப்பை நாமே ஏற்றுக்கொள்வதைவிட மற்றவர்களை குறைகூறுவது சுலபமானதாகும். அந்த வகையில் துரநோக்கு இல்லாமலும் உங்களது சொந்த தோல்வியாலும் மற்றவர்களை குழப்பமுடியும்.

இலங்கை மக்கள் அவர்கள் எங்கிருந்து வருகின்றனர் , அல்லது என்ன மொழியை அவர்கள் பேசுகின்றனர் , அல்லது எந்த மதத்தை சார்ந்தவர்கள் என்ற வேருபாடுகள் இல்லாமல் எல்லோரும் அடிப்படையான முக்கிய அக்கறை கொண்டுள்ளனர் என்பதை மீண்டும் மீண்டும் எமக்கு வெளிப்படுத்தியுள்ளார்கள் என்று நான் நம்புகின்றேன். சமாதானத்தில் , சட்டம் ஒழுங்கு, பொறுப்புக்கூறுதல், இந்நாட்டை முன்நோக்கி நகர்த்துதல் என்பவற்றில் ஓவ்வொருவருக்கும் தனியான அக்கறை உள்ளது. ஒருவருக்கு ஒருவர் பகை ஏற்புடுத்தி பிரித்துவைப்பதைவிட அவர்களுக்காக சேவைசெய்யக்கூடிய ஒரு அரசாங்கத்தை இலங்கை மக்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

அதன்காரணமாக முழு உலகமும் இலங்கை வெற்றியடைந்து அந்த வழியை மற்றவர்களுக்குக் காட்டவேண்டும் என எதிர்பார்க்கிறது. அந்த முயற்சியில் உங்களது பங்காளிகளாக இருப்பதில் நாம் பெருமையடைகின்றோம்.

மிக்க நன்றி.